அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைக்கேற்ப இயலுமானால் தானமாகவும், இல்லாவிட்டால் விலைக்கும் வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை தான் இப்பொழுது இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு சாலைகள் இணைப்புக்காகவும், ரோடு வசதிக்காகவும் நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. சில இடங்களிலே சாலைகள், பஸ் போக்குவரத்து அதிகமாகிவிட்டதாலே பாதுகாப்பு இல்லாத நிலைமையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட ரோடுகளுக்காவது நிதி வசதியளித்து போக்குவரத்துக்குப் பாதகம் இல்லாமல் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா முத்துசாமி: இது உள்ளபடியே கவனத்திலே கொள்ளவேண்டிய பிரச்சனைதான் என்றாலும், மாநில பொதுப்பணித் துறையானது அந்த வகையிலே கவனம் செலுத்தும். சில பல ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் 250 மைல்களுக்கும் சென்ற ஆண்டு அதற்குக் கூடுதலாகவும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு பராமரிப்பு நடைபெற்று வருகிறது. மேலும் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தலாம். அதிகமாகக் கொடுத்தால் மேலும் நிலைமை சீராகும்.

திரு. கே. பி. எஸ். மணி : கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற ரோடுகள் எல்லாம் பராமரிக்கப்படாமலே இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கீழ்த் தஞ்சையிலே சலைன் லேண்டாக இருப்பதால் முதலிலே கப்பி போட்டால் கப்பி போட்டதாகவே தெரியவில்லை. இரண்டாவது முறை கப்பி போட்டாலும் கப்பி போட்டதாகத் தெரியவில்லை. மூன்றாவது தடவை போட்டால்தான் கப்பி போட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றி டி.டி.சி. மீட்டிங்கிலே இதற்காக 40 பைசா என்று இருப்பதை 80 பைசாவாக அதிகரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கனம் உறுப்பினர் அந்த ஊராட்சியினுடைய தலைவராக இருப்பதால் நிர்வாகத்திலே இருக்கிற சங்கடங்கள் அவருக்குத் தெரிந்திருக்கும். 40 பைசாவை 80 பைசாவாக ஆக்குவது பாதையினுடைய வளர்ச்சிக்காக இருந்தாலும் மத்திய அரசு அதிகமாக்கக்கூடிய சூழ்நிலையில் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிகமாக நிதி கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

பொள்ளாச்சியில் தொழிலாளர் மருத்துவமனை

* 89. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி பகுதியில் E.S.I. திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

1969 பிப்ரவரி 26]

(இ) அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு சு. துரைசாமி: தலைவர் அவர்களே, இந்த இ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் பல இடங்களிலே திருப்பூர், உடுமலைப்பேட்டை போன்ற இடங்களிலே மருத்துவ மனை கட்டுவதற்காக முடிவு எடுக்கப்பட்டும் இடங்களைக் கையகப்படுத்துவதற்குக் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே அதைத் துரிதப்படுத்தி அப்படிப் பட்ட இடங்களைக் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது பொள்ளாச்சியைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்கள் சொல்லலாம்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பழனியில் இ. எஸ். ஐ. திட்டம் ஆரம்பிப்பதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து இடம் பார்த்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம்: தலைவரவர்களே, பொள்ளாச்சியிலே பஞ்சாலைகளிலே வேலை செய்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நல்லமுறையிலே மருத்துவ வசதியில்லாமல் இருக்கிறது. ஏற்கனவே உள்ள அரசாங்க மருத்துவ மனைகளும் வசதியாக இல்லை. குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் பிரசவ காலங்களிலே அல்லலுக்குள்ளாக நேரிடுகிறது. எனவே முதன் முதலில் குறைந்தபட்சம் பிரசவ விடுதியாவது ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொள்ளாச்சியிலே 16 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஆரம்பிப்பதற்காக ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டு வேலைகள் விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்வேலி மின்விசைக்குக் கூடுதல் விலை

* 90. வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: } மாண்புமிகு மின்
டாக்டர் எச். வி. ஹண்டே: }
சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் மத்திய அரசாங்கம் நெய்வேலி மின் விசைக்குக் கூடுதல் விலை மாநில அரசைக் கேட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?